TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XI.] MAY, 1911-ஹூ மேமீ. [இலக்கம் 2.

அமெரிக்காவில் பல தேசத்தார் கூடி நடத்திய முதல் தயாள சபை.

1910-ம் வருஷம் அக்டோபர் மாசத்தில் அமெரிக்கா தேசத்தில் வாஷிங்டன் (Washington) நகரத்தில் கூடின "தயா கூட்டத்தாரின்" (Humane Congress) நோக்க மென்னவென்றால், பிராணிகளின் நிலைமையைச் சீர்திருத்தும்பொருட்டுப் பல தேசங்களிலும் பலவிதங்களில் உழைத்து வருகிற மிருகாபிமானிக ளெல்லாரு மோரிடத்திற் சந்தித்து, அவரவர்களின் அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும் பிறர்க்கறிவித்து, அவர்களெல்லாருடைய காரியங்களையும் ஒருமைப்படுத்த வேண்டு மென்பதே. இந்த சத்காரியத்தைச் சிரசிற்கொண்டு அதை நடத்திய "அமெரிக்கா தயா சங்கத்துக்கும்" (The American Humane Association), அதன் தலைவரான டாக்டர் டப்ளியூ. ஒ. ஸ்டில்மன் (Dr. W. O. Stillman) துரை யவர்களுக்கும் யாவரும் நன்றியுள்ளவர்களா யிருக்கவேண்டும். "அமெரிக்கா தயா சங்க"மென்பது, திக்கற்ற சிசுக்கள் வாயில்லாப் பிராணிகள் இவைகளின் பாதுகாப்பின்பொருட்டு ஐக்கிய மாகாணங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பல சங்கங்கள் சேர்ந்த ஒரு பெரிய சங்கமாம். அந்த தயா கூட்டத்திற்கு அன்னிய தேசங்களிலிருந்து முப்பத்திரண்டு பிரதிநிதிகளும், அமெரிக்காவிலுள்ள சங்கங்களிலிருந்து இருநூற்றிருபது பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். சொற்பகாலத்திற்கு முன்புதான் ஜீவஹிம்ச நிவாரண விஷயத்தைக் கவனிக்கத் தொடங்கின சீனு, ஜப்பான், பெர்ஷியா தேசங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் மிகவும் நேர்த்தியாய்ப் பிரசங்கித்தார்களாம். இன்னு மிதரப் பிரதிநிதிகளும் தங்கள் தங்கள் தேசங்களில் எந்தெந்தவிதமாய் ஜீவஹிம்ச நிவாரணக் காரியங்கள் நடந்தேறி வருகின்றன வென்பதைப்பற்றியும் அத்தேசங்களில் இன்னும் செய்யப்படவேண்டிய காரியங்களைப்பற்றியும் பிரசங்கித்தார்கள்.

அக்கூட்டத்துக்கு வந்தவர்கள், இதர தேசங்களில் பிரசுரஞ் செய்யப்படுகிற பத்திரிகைகள், புஸ்தகங்கள், ஹிம்சையின்றிக் கொல்வதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள், குதிரைகளுக்குக் கஷ்டமுண்டாக்காத ஜீனிகள் முதலிய பொருள்களைக் கண்ணுறும்பொருட்டு அவைகளைச் சேகரித்து வைத்திருந்தார்கள்.

இவ்வாறு ஒரே விஷயத்திற்காக உழைக்கிறவர்கள் ஒருவரை யொருவர் சந்தித்தது மிகவும் நேர்த்தியா யிருந்திருக்கும். அங்கே பிரசங்கஞ் செய்தவர்கள் எல்லாருடைய உபந்நியாசங்களையு மிங்கு எழுத முடியாதாகையால், டாக்டர் ஸ்டில்மன் துரையவர்களின் உபந்நியாசத்தின் சாராம்சமட்டும் எழுதுவோம். அதாவது:—

"சீமாட்டிகளே! சீமான்களே! உங்களுடைய வரவை நான் அதிக திருப்தியுடன் அங்கீகரிக்கிறேன். இக்கூட்டத்திற்கு வந்தவர்க ளெல்லாரும் உலகத்தில் அநேக காலமாய் நடந்துவருகிற குரூரச் செயல்களை நிறுத்தும்விஷயத்தில் விருப்பங்கொண்டு

முயன்று வருபவர்களா யிருக்கிறார்கள். சில நூற்றாண்டுகளுக்குமுன் னிருந்தவா றின்றி இக்காலத்தில் ஜனங்கள் மெலிந்தவர் களிடத்திலும் திக்கற்ற ஜந்துக்களினிடத்தி லும் கருணையுள்ளவர்களாகிக்கொண்டு வரு கிறார்கள். 1809-ம் வருஷத்தில் இங்கி லாந்து தேசத்துப் பார்லியமெண்டில் லார்டு எர்ஸ்கைன் (Lord Erskine) என்னும் பிரபு ஜீவ ஹிம்சையை நிறுத்தச் சட்டங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று பேசினபோது அவரை யெல்லாரும் அவமதித்தார்களாம். 1866-ம் வருஷத்தில் நியூயார்க்கு (New York) நகரத்து வீதிகளில் ஊமை ஜந்துக்க ளின் நிலைமையைப்பற்றிப் பரிதாபத்துடன் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்த மிஸ்டர் ஹென்றி பர்க் (Mr. Henry Bergh) துரை யவர்களை அநேகர் ஏளனஞ் செய்ததுமன்றி, அவரைப் பிடித்தடித்து மிருக்கிறார்களாம்.

ஆனால் தற்காலத்தில் அப்படியில்லாமல், மேற் கூறப்பட்டவர்களைப்போன்ற சிலர்களு டையவும், அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக் கும் சங்கங்களினுடையவும் முயற்சியினால் உண்டாகியிருக்கிற மேம்பாட்டிற்காகக் கட வுளுக்கு அதிக வந்தனம் செலுத்தற் பாலரா யிருக்கிறோம். இப்பொழுது ஹிம்சை செய் வது மனிதரின் மனதிற்கே ஒவ்வாமலிருப் பதுடன் அஹிம்சையைப் பயத்தினாற் போ திப்பிக்கும்பொருட்டு அநேக சட்டங்களு மேற்பட்டிருக்கின்றன. இந்த ஐக்கிய மாகா ணங்களில் சென்ற ஒரு வருஷத்திற்குள் பல நூதன சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டும் பழைய சங்கங்களி லநேகம் சீர்திருத்தப் பட்டு மிருக்கின்றன. இப்பொழுது உல கத்திலுள்ள சங்கங்களெல்லா மொன்றுகூடி ஜந்துக்களின் ஹிதத்தைப்பற்றிச் செய்ய வேண்டிய விஷயங்களை யாலோசிக்கிற காலம் வந்திருக்கிறது. அவ்வாறு ஆலோசிக்க வேண்டிய விஷயங்கள் அநேகமுண்டு. அவற் றுள் மிருகங்களையும் பறவைகளையும் வேறு தேசங்களுக்கு ஏற்றுமதி செய்தனுப்பும் போது நடக்கிற அக்கிரமங்கள், பெரிய நக ரத்து வீதிகளின் தளவரிசை, ஜந்துக்க ளின் வைத்தியசாலைகளை யதிகரித்தல், பள் ளிக்கூடங்களில் அஹிம்சையைப் பற்றிப் போதிப்பது முதலியவை சில முக்கியமான விஷயங்களாயிருக்கின்றன."

வங்கவோல்
கால்நடைகளின் காட்சி.

கடந்த பிப்ரவரி மாதத்தில் வங்கவோ லில் நடந்த கால்நடைகளின் காட்சியின் சடங்குகளின்தொடக்கத்தில்ஜில்லாக்கலெக் டராகிய மிஸ்டர் மெக்கீவர் துரையவர்கள் செய்த உபந்நியாசத்தின் சாராம்சமாவது:—

"வருஷந்தோறும் இந்தமாதிரிக் காட்சி களைஏற்பாடுசெய்துவருகிற கால்நடைக்காட் சிச் சங்கத்தாருடையவும் (Cattle Show Committee), இவ்வருஷம் தம்முடைய சொந்த முயற்சியினால் ஒரு கிருஷிப் பொ ருள்களின் காட்சியை ஏற்பாடுசெய்தராவ்சா ஹிப் தாச மார்க்கண்டேய சாஸ்திரிகளுடை யவும் (Rao Sahib Dhasa Markhande-ya Sastri) ஊக்கம் வியக்கத்தக்கதே. அவர் இராஜாங்கத்தாரால்ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கிருஷிச்சாலைகளில் உபயோகப்படுத்துகிற நவீனக் கிருஷிக்கருவிகளையும் பயிரிடுகிற மாதிரிகளையும் தாமும் பரிசோதித்துப் பார் த்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வருவதுபோலவே, இதர வேளாளர்களும் ரயத்துகளுஞ் செய்து வருவார்களாயின் இந்த ஜில்லாவின் வேளாண்மை இன்னும் அதிக செழிப்படையும். அதுநிற்க, இந்தக் கால்நடைகளின் காட்சியைப்பற்றி யாராய் கையில் இதைப்போன்ற காட்சி இந்த இரா ஜதானியில் வேறெந்தவிடத்திலும் நடந்த தில்லை யென்பது திண்ணம். இந்தக் காட்சி யில் விற்கப்படுகிற நல்ல ஜாதி மாடுகளை வாங்கும்பொருட்டுத்தூரதேசங்களிலிருந்து பலர் வந்திருக்கிறார்களென்னும் விஷயமே இந்த ஜில்லா மாடுகளைப்போன்ற மாடுகள் இந்தியாவில் வேறெங்குமில்லை யென்பதற் குச் சாட்சியா யிருக்கிறது. அவைகளின் சிறப்பிற்கு முக்கிய காரணம், அவைகளின் தேக சுபாவத்திற்கும் இந்த வூரின் சீதோ ஷ்ண நிலைக்கு மிருக்கும் பொருத்தமென லாம். இன்னு மிங்கே அவைகளின் உணவுப் பொருள்கள் புஷ்டியுள்ளனவாயு மிருக்க லாம். அது எப்படியிருந்தபோதிலும், இந்த வூரார் தங்களுடைய கால்நடைகளைப் பொன் வெள்ளி முதலிய உலோகங்களின் சுரங்கங் களைக்காட்டிலும் அதிக விலையுள்ளனவாக மதிக்கவேண்டும். ஏனென்றால் சுரங்கங்களி லிருந்து அதிக லாபம் கிடைத்தபோதி

லும் அவை எப்பொழுதாவது ஒருகாலத்தில் வற்றிப்போகும். ஆனால் கால்நடைகள் அப்படியல்ல. அவைகளின் உணவு, தேக சௌக்கியம் முதலியவைகளைக் கவனித்து நல்ல ஜாதி மாடுகளின் சந்ததியைப் பெருக்கிக்கொண்டுவந்தால் எக்காலத்திலும் அவைகளினால் லாபம் அடைந்து வரலாம். சிறந்த ஜாதிகள் கலப்பில்லாமல் எவ்வளவுக் கெவ்வளவு பெருக்கப்படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு லாப முண்டு. அதற்காகத்தான் அதிக லாபம் வருகிறதென்று சிறந்த ஜாதி மாடுகளை அதிகமாய் விற்றுவிடக் கூடாது. ஒவ்வொருவரும் தங்களுடைய வீடுகளில் அவைகளின் தொகை குறையாமலிருப்பதற்காகப் போதுமானவளவு இருத்திக்கொண்டு மிகுந்துள்ளவற்றை விற்க வேண்டும்.”

துரையவர்களின் உபந்நியாசம் முடிந்த பிறகு, எல்லாரும் அங்கே கொண்டுவரப்பட்ட கால்நடைகளை யெல்லாஞ் சுற்றிப் பார்த்து உயர் ஜாதிகளைக் கொண்டுவந்தவர்களுக்குத் தகுந்த பரிசுக ளளித்தார்கள்.

வெள்ளை முயல்.

வெள்ளை முயல் அல்லது குழி முயல் என்று சொல்லப்படுகிற பிராணி முயல் ஜாதியைச் சேர்ந்தபோதிலும் சாதாரண முயலுக்கும் இந்தப் பிராணிக்கும் அநேக வேற்றுமைக ளிருக்கின்றன. வெள்ளை முயல் மற்றவைகளைக்காட்டிலும் சிறியதும் புத்தியுள்ளதுமாம். சாதாரண முயல் வெள்ளை முயலைப்போல் நேசமுள்ள ஜந்து வல்ல. அது பூமியின் மேற்புறத்திலேயே வசிக்கும். வெள்ளை முயலோ பூமியில் குழிகள் தோண்டி அவைகளில் வசிக்கும். வெள்ளை முயலின் குட்டிகள் சிலநாள்வரையில் கண்ணைத் திறக்காம லிருக்கும். அதனால்தான் தாய் முயல் அவைகளைக் குழிகளில் பத்திரமாய்ப் பாதுகாத்து வைக்கிறது. வெள்ளை முயலுக்கு அபாயம் வருவதை முன்னிட்டு உணர்வதிலதிக நுட்பமான சக்தி யுண்டு. நாட்டுப்புறத்து வயல்களில் சாதாரணமாய் இந்த முயல்கள் கும்பல் கும்பலாய்க் கூடி வேடிக்கையாய்த் தின்பதும் விளையாடுவதுமாயிருக்கும். ஏதாவது அபாயம் வருகிறதென்கிற சந்தேகம் அவைகளி லொன்றுக்குத் தோன்றினால் அது உடனே விளையாட்டை நிறுத்திவிட்டுத்தன்னுடைய சந்தேகத்தைத்தீர்த்துக் கொள்ளும்பொருட்டு இப்புறம் அப்புறம் அசையாமலிருந்து உற்றுக் கவனிக்கும். உண்மையாகவே அபாயம் வரும்பக்ஷத்தில் அது உடனே தன் பின் கால்களினால் தரையை உதைத்தும் கூச்சல் போட்டும் மற்றவைகளுக்குச் சங்கதியைத் தெரிவித்துவிட்டு அதன் வளைக்குள் நுழைந்துவிடும். உடனே அக்கூட்டத்திலுள்ள மற்ற முயல்களும் அவ்வாறே அவைகளுக்கு அடுத்தாற்போலிருக்கும் கூட்டத்திற்கு அபாயம் வருகிற தென்பதைத் தெரிவித்துவிடும். இப்படி அவையெல்லாம் அபாயத்தினின்றும் தப்பித்துக்கொள்ளும். வெள்ளை முயல்கள் அவ்வவற்றின் சொந்த வளைகள்தவிர மற்ற வளைகளில் வசிப்பதில்லையாம். ஒரு முயலின் சந்ததி அதிகரித்து இடம் போதாமற் போனால் அதே வளையை இன்னும் பெரியதாகத் தோண்டும் அல்லது புதிதாய்ப் பெரிய வளை தோண்டிக்கொள்ளும். அவைகளின் தொகுதி நாளுக்குநாள் அதிகமாகிற தென்பதற்குச் சந்தேகமே யில்லை. அவைகளை வளர்க்கிறவர்கள் ஒரு முயல் ஒரு வருஷத்தில் ஏழு அல்லது எட்டுமுறை ஈனுகிறதென்றும் ஒரு தடவையில் ஐந்து முதல் எட்டுக் குட்டிகள் ஈனுவதாகவும் சொல்லுகிறார்கள். ஆகையால்தான், ஆஸ்திரேலியா, நியூஜீலண்டு தேசங்களில் அவைகளின் உபத்திரவம் பொறுக்க முடியாமற்போய் அவைகளின் தொகையைக் குறைப்பதற்காகப் பணச்செலவு செய்யவேண்டியதாய் நேரிட்டதாம்.

முயலின் இறைச்சியைச் சிலர் சாப்பிடுகிறார்களாம். அதன் உரோமம் ஆடைகளுக்கு உபயோகப்படுகிறது. அவைகளைச் சுட்டுக் கொல்வது சுலபமான காரியமாயில்லாதிருப்பதினால் அவைகளை வலையிட்டுப் பிடிக்கவேண்டியதாக விருக்கிறது. இது ஒரு குரூரமான வழக்கம். ஏனென்றால், வலைகளின் கண்களில் முயலின் தலையோ, வாலோ, கால்களோ அகப்பட்டுக்கொண்டு வெகுநேரம்வரையில் ஹிம்சையாயிருக்கும். அவைகளை இவ்விதமான ஹிம்சையின்றிப் பிடிப்பதற்கு ஏதாவது உபாயம் சீக்கிரத்தில் கண்டு பிடிப்பார்களென்று கோருகிறோம். அதுவரையில் வலையிடுகிறவர்கள் அடிக்கடி

வலையண்டை போய்ப் பார்த்து அதில் அகப் பட்டுக்கொண்டிருக்கிற பிராணியின் அவஸ் தையைக் கூடிய சீக்கிரத்தில் போக்கிவிட யத்தனிப்பார்க ளென்று நம்புகிறோம்.

அறுபது வருஷங்களுக்கு முன் ஸ்காட் லாந்து தேசத்தில் வெள்ளை முயலே அபுரூப மாம். இப்பொழுது அங்கே கணக்கற்ற முயல்க ளிருக்கின்றனவாம். ஸ்பெயின் தேசத்து முயல்கள் இங்கிலாந்தி லுள்ளவை களைக்காட்டிலும் வெள்ளையாயும் சிறியவை யாயு மிருக்கின்றனவாம். சாதாரணமாய் வீடுகளில் வளர்க்கப்படுகிற முயல்கள் காட் டிலுள்ளவைகளைக்காட்டிலும் சிறியனவாக வேயிருக்கும். அதில் 4, 5 விதமுண்டு. அவற் றில் காதுகள்வெட்டுண்டாற்போலிருப்பவை ஒரு சாதி. அங்கோராவென்று சொல்லப் படுகிற மற்றொரு சாதி முயலுக்கு நீண்டதும் மிருதுவானதுமான உரோம மிருக்கும்.

முயல்களை வளர்க்கிறவர்கள் அவைகளை யடைத்துவைப்பதற்கு ஒரு பழைய பெட்டி யாவது மெல்லிய பலகையினால் செய்யப் பட்ட கூடுகளாவது போதுமென்று நினைக் கக்கூடாது. நல்ல மரத்தைக்கொண்டு இர ண்டு சதுரஅடி விஸ்தீரணமுள்ள பெட்டிக ளைச் செய்யவேண்டும். அப்பெட்டிகளைத் தரைமட்டத்திற்கு ஓர் அடி உயரத்தில் மேடான விடத்தில் வைத்து முற்புறத்தில் மெல்லிய கம்பிகளைப் போட்டு அந்தப் பக் கத்தை முழுதும் திறந்தே வைக்கவேண்டும். மற்றப் பக்கங்களிலுள்ள பலகைகளில் சிறு துவாரங்களைத் துளைத்துவிடவேண்டும். பெட் டியை அடிக்கடி சுத்தஞ்செய்வதுடன் வெயில் படும்படியான விடத்தில் வைக்கவேண்டும். உலர்ந்ததும் சுத்தமுள்ளதுமான படுக்கை போடவேண்டும். மழைக்காலங்களில் கம்பிக் கதவை நல்ல துணியினால் மூடவேண்டும்.

அவைகளுக்குத் தீனி போடுவதில் சிறிது ஜாக்கிரதை யெடுத்துக்கொள்வ தவசியம். வேளை தப்பாமலும் அளவு குறையாமலும் காலையி லொருதடவை மாலையி லொரு தடவை போட்டால்போதும். பகலில் அவை தூங்குகிற வழக்கமுடையவை யானதால் அப்பொழுது ஆகாரம் கொடுக்கக்கூடாது. மாலையில் கொடுக்கிற உணவு புஷ்டியுள்ளதா யிருப்பது நலம். ஏனெனில், அவை இரவில் தான் அதிக பசியுடன் உண்கின்றனவாம். அவை சாதாரணமாய்க் கிழங்கு வகைகளை யும் பழத் தினுசுகளையும் தின்னும். அவை களுக்குமா, தவிடு, பொட்டு முதலியவைகளை யுங் கொடுக்கலாம். வெள்ளை முயலுக்குப் பசுமையான புல்லின்மே லதிக விருப்ப முண்டு. மற்றப் பிராணிகளைப்போ லதற் கவ்வளவு தண்ணீர் வேண்டியதில்லை. ஆன போதிலும் அதற்கு வேண்டும்போது குடிக் கும்பொருட்டுப் போதுமான ஜலம் வைத் திருக்கவேண்டும். வெள்ளை முயல் அதிக சுத்தமான ஜந்துவாதலால் அதன் கூடுகளை எப்போதும் சுத்தமாய் வைக்கவேண்டும். எந்தப் பிராணியை வளர்க்கவேண்டுமானா லும் அதன் இயற்கைப் பழக்கங்களைத் தெரிந்துகொண்டு அவைகளின் சுபாவ நிலை யிலேயே வைத்திருக்க முயலவேண்டும்.

ஜந்துக்களைப் பாதுகாத்தல்.

“ஜந்து பிரபஞ்சம்” என்னு மோர் இங் கிலீஷ் பத்திரிகையில் துரை யொருவர் “ஜீவ ஹிம்சையைப்பற்றி யெனக்குள்ள அபிப் பிராயம்” என்னும் தலைப்பெயரிட்டு இதன டியில் கண்டவாறு ஒரு வியாச மெழுதி யிருக்கிறார்:—

“இந்த துக்கசாகரமான பிரபஞ்சத்தி லிருக்கிற பிராணிகளி னிலைமையைச் சீர்ப் படுத்துவதற்காகச் செய்யப்படுகிற ஒவ் வொரு காரியமும் என் மனதுக் களவற்ற சந் தோஷத்தைக் கொடுக்கிறது. ஆனால் அவை களை யாராவது ஹிம்சிப்பதைக் காணும் பொழு தெனக்குண்டாகிற மனவருத்தம் என்னுவியையே போக்கிவிடும்போ லிருக் கிறது. பெருமாட்டிகளின் தலையுடைகளி லலங்கரிக்கப்படுகிற இறகுகள் ஒருவருக்குந் தீங்குசெய்யாத அநேக சிறு பிராணிகளின் உயிரை வாங்கிக்கொண்டு வரப்பட்டவை யென்று தெரிவிக்கிறதால், அவைகளை யணி கிற ஸ்திரீகளை நான் நேசிக்கிறதில்லை.

கோடைகாலத்தில் குதிரைகளுக்காக வைக்கப்படுகிற தண்ணீர்த் தொட்டிகளைப் பார்த்தவுடன் அதிகக் களிப்படைவேன். அவைகள் வெயிலில் பாரங்களைச் சுமந்து ஓடிக் கஷ்டப்படுகிறதினா லுண்டாகுந் தாகத் தையும், மண்காற்றை உட்கொள்ளுவதாலுண் டாகிற வரட்சியையும் போக்கும் பொருட்டு அவைகளுக்குச் சுத்த ஜலம் வைப்பது மிக வும் பட்சமான காரியமல்லவா?

அநேக ஜனங்கள், குதிரை, மாடு, நாய் முதலிய பிராணிகளின் சுபாவந் தெரியாமல் அவைகளுக்கு வேண்டிய சுகங்களைப் பற்றிக் கவலையற்றவர்களா யிருக்கிறார்கள். அவர்களேன் அப்படி யிருக்கிறார்களென்று கேட்க, அவர்கள் தங்களுக்குத் தெரியாதென்று விடையளிக்கிறார்கள். அப்படிச் சொல்லுவது சரியல்ல. எங்களுக்குத் தெரியாதென் றவர்கள் சொல்வதினால் அந்த ஜந்துக்களின் கஷ்டம் நீங்காது. ஆகையால் நாம் வளர்க்கிற பிராணிகளின் சுபாவங்களை யறிந்து அவைகளைச் சுகமாய் வைத்திருக்கவேண்டும்.

வாடகை வண்டிகளின் குதிரைகளையும் மாடுகளையும் வண்டிக்காரர் ஏதாவது ஹிம்சை செய்வதைக் கண்டால் அவ்வாறு செய்யக்கூடாதென்று அவர்களுக் குடனே சொல்லவேண்டும். அப்படி யவர்களிடத்திற் சொல்வதற்குத் தைரியம் போதாதவர்கள் வண்டியின் நம்பரைக் குறித்துக்கொண்டு ஜீவ ஹிம்ச நிவாரண சங்கத்துக் காரியதரிசிக்கு அதைப்பற்றி யெழுதினால், அவர் அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் நடத்துவார். அந்தக் குரூரமான செய்கை உடனே நிறுத்த வேண்டிய தவசியமானால், அருகிலிருக்கும் போலீஸ் சேவகனை யழைத்துவந்து அந்த வண்டிக்காரனை யவனிடத்தில் ஒப்பித்துவிடுவதே நலம்."

சாஸ்திர ஆராய்ச்சிச் சங்கம்.

அமெரிக்காவில் நியூயார்க் என்ற பட்டணத்தில் ராக்வெல்லர் (Rock-feller) என்ற ஓர் கோடீஸ்வரர் வைத்திய ஆராய்ச்சி வித்தியாசாலை ஒன்றைத் தமது சொந்தச் செலவில் ஏற்படுத்தி யிருக்கின்றார். அதிலுள்ள டாக்டர் கேரல் (Dr. Carrel) என்பவர் பிலடல்பியா (Philadelphia) விலுள்ள சாஸ்திர ஆராய்ச்சிச் சங்கத்தின் முன் ஓர் பிரசங்கம் செய்தார். அதில் தாம், செத்துப்போன மிருகங்களி னுள்ளிருக்கும் ஜீவாதார யந்திரக் கருவிகளை எடுத்து உயிரோடிருக்கும் மிருகங்களுக்குள் வைக்கும் மர்மத்தைக் கண்டுபிடித் திருப்பதாகச் சொன்னார். அவர் சொன்னதாவது:—

"நாங்கள், செத்துப்போன ஓர் பூனையினுள்ள குண்டிக்காயை (Kidney) எடுத்து உயிரோடிருக்கும் பூனையின் குண்டிக்காய்க்குப் பதிலாக அதை வைத்தோம். மூன்று வாரமாக அந்தப் பூனை சிறிது வாடியிருந்து பின்பு பூரண சுகமடைந்தது. செத்துப்போன ஓர் நாயின் காலை வெட்டி உயிருள்ள நாய்க்கு மாற்றினோம். மூன்று மாதத்தில் அந்த நாயானது அந்தக் காலைத் தன் சொந்தக் கால்போல் உபயோகிக்கவும் மடக்கவும் ஓடவும் திராணி உள்ளதாயிற்று. செத்த மனிதனுடைய முழங்கால் மூட்டை எடுத்துக் காலொடிந்த ஓர் உயிருள்ள மனுஷனுக்கு உபயோகித்து அதிலும் சித்தி யடைந்திருக்கிறோம். நாயின் வயிற்றிலுள்ள இரத்த தாரைகளை (Arteries) பூனையின் வயிற்றிற்கு மாற்றியிருக்கிறோம். மனுஷ காலிலுள்ள இரத்த தாரைகளை நாயின் காலுக்கு மாற்றி யிருக்கிறோம். ஆனால் செத்த மிருகங்களின் அவயவங்களை அழியாமல் காப்பாற்றுவதுதான் நான் செய்த பரிசோதனைகளிலெல்லாம் அதிக கஷ்டமா யிருந்தது. அவற்றையுங்கூடப் பனிக்கட்டி உறைவதற் கவசியமான சீதளத்தில் நன்றாய் காற்றுப் போகாமல் அடைத்துவைத்துக் காப்பாற்றும் வகை கடைசியில் கண்டுபிடித்தேன். இவ்விதமாய் ஓர் இரத்ததாரையை 60 நாள் காப்பாற்றி யிருக்கிறேன். ஆகவே, யாதொரு கஷ்டமுமின்றி மனுஷருக்கும் இவ்விதமாகச் செய்து கெட்டுப்போன அவயவங்களுக்குப் பதிலாக நாய் பூனை முதலியவற்றின் உறுப்புகளை வெகு எளிதில் உபயோகித்து அவர்களின் ஆயுளை நீடிக்கச் செய்யலாம்" என்று சொன்னார். அச்சமயம் அக்கிராசனம் வகித்த டாக்டர் கீன் (Dr. W. W. Kene) என்பவர், டாக்டர் கேரல் சொல்லிய விஷயங்கள் யாவும் சாத்தியமேயாயினும் பண்டிதர்களுக்கு வேண்டிய சமயத்தில் சுகமான உறுப்புகளைக் கண்டுபிடிப்ப தொன்றுதான் கஷ்டமாயிருக்கலா மென்றார்.

டாக்டர் கேரல் கண்டுபிடித்த விஷயங்களுக்காக அவரைப்பற்றி எல்லா வர்த்தமானப் பத்திரிகைகளிலும் வாழ்த்து கூறியிருப்பதுடன் ஆயுர்வேத பாஸ்கர பண்டிதர்களும் அவர் சொல்லியபடி செய்து ஆராய்ச்சி செய்யத் துணிந்துவிட்டனர்.

இரங்கூன் ரஞ்சிதபோதினி.

ஒட்டகம்.

மிருகங்களில் காட்டு மிருகங்கள் நாட்டு மிருகங்கள் என இருவகையுண்டு. காட்டு மிருகங்கள் காட்டில் வசிப்பவைகளாம். நாட்டு மிருகங்கள் மனிதருக்கு மிக்க உபயோகமானவை. இந்நாட்டில் நமக்குப் பசு பயன்படுவதுபோல அரபியருக்கு ஒரு விலங்கு பயன்படுகிறது. அது ஒட்டகம் எனப்படும்.

ஒட்டகம் ஒரு விந்தையான விலங்கு. அது பார்வைக்கு விகாரமாயும் நெட்டையாயும் இருக்கும். அது ஏறக்குறைய 8 அடி உயரமுள்ளது. ஒரு பொருளை அதன் உருவத்தினுல் மதிக்காமல் குணத்தினுல் மதிக்க வேண்டும். ஒட்டகம் பார்வைக்கு விகாரமாய்த் தோற்றினுலும் அது உபயோகத்தில் சிறந்து விளங்குகின்றது.

அரேபியா தேசத்தை யடுத்து மிக விஸ்தாரமான மணல் வெளிக ளுண்டு. அவை பாலைவனம் எனப்படும். அங்கு நீரும் நிழலும் காண்ப தரிது. அந்த வனுந்தரத்தில் பிரயாணஞ்செய்வது ஒட்டகத்திற்கும், தீப் பறவைக்குமேயன்றி மற்றெந்தப் பிராணிக்கும் சாத்தியமன்று. வேறு எவ்வகையிலுங் கடந்துபோகக்கூடாத சமுத்திரத்தை நீராவிக் கப்பலின் மூலமாய்க் கடந்துபோவதுபோல், பாலைவனங்களை ஒட்டகத்தின் மூலமாகவே கடக்க நேரிடுகின்றது. அதனுல் ஒட்டகத்திற்கு "வனுந்தரக் கப்பல்" என்று பெயர். இவ்விலங்கைக் கடவுள் இவ்வகை உபயோகத்திற்கென்றே சிருஷ்டித்ததாக அதன் இயற்கைக் குணங்களால் நன்கு புலப்படுகின்றது.

ஒட்டகம் நீர்நிலையைக் கண்டவிடத்தில் தனக்கு வேண்டியமட்டும் தண்ணீரை யுண்டு நிரப்பிக்கொண்டு சுமார் ஒருவாரம்வரையில் தண்ணீர் குடியாமலே பிரயாணஞ்செய்யும். இதன்றி உணவில்லாமலும் இருப்பதுண்டு. இந்தச் சக்தி எந்தப் பிராணிக்கும் உண்டாவது அரிது. ஒட்டகத்திற்கு முதுகில் ஒருவகைக் கூன் உண்டு. அதற்குப் புருடு என்று பெயர். அப்புருடு முழுதும் கொழுமையானது. ஒட்டகத்திற்கு ஆகாரமில்லாதபோது அது கரைந்து அதற்கு ஆகாரமாகிறது. ஒட்டகத்தின் பாதம் பிளவுபட்டு அகன்றதா யிருப்பதனுல் மணலில் செல்ல அது அநுகூலமாயிருக்கிறது.

ஒட்டகம் அமிதமான பாரத்தைத் தாங்கிச் செல்லும். அதன் எஜமானன் சுமையை அதன்மேல் ஏற்ற விரும்பும்போது அது முழங்காற்படியிட்டுப் படுத்துக்கொள்ளும். அவன் அது சுமக்கக்கூடாத சுமையை அதன்மேல் ஏற்றினுல் அது மனத்தில் கபடம் வைத்துக்கொண்டு நடந்து செல்லாமல் அசைவற்று நின்றிருக்கும். அப்போது எஜமானன் அது காணும்படி ஏதாவது ஒரு சிறு மூட்டையை அதன்மேலிருந்து எடுத்து எறிந்துவிட்டால் உடனே பிரயாணப்படும்.

ஒட்டகத்தின் பால் அரபியருக்குச் சிறந்த உணவாகிறது. அதன் உரோமம் வருஷத்திற் கொருமுறை உதிர்ந்துவிடும். அதனுல் உடைகளும், கூடாரங்களும் செய்யப்படுகின்றன.

ஒட்டகம் சிறு முட்செடிகளையும் கொடிகளையும் தின்னப் பிரியப்படும். வேப்பிலையே அதற்கு விருப்பமான உணவு. சில ஒட்டகங்களுக்கு முதுகில் இரண்டு திமில் இருப்பதுண்டு.

தீக்குருவி.

தீக்குருவியின் இறகுகள் அழகான ஆபரணமாகப் பல நூற்ருண்டுகளாக மதிக்கப்பட்டுவருகின்றன. சுமார் நாற்பது வருஷகாலமாய் அவைகளின் தோகைகளுக்காக தீக்குருவிகளை வளர்த்து வருகிருர்கள். ஆதியில் தீக்குருவிகளை வளர்க்க ஆரம்பித்தவர்கள் தாங்கள் ஏதோ பெருஞ் செல்வச் சுரங்கத்தைக் கண்டுபிடித்ததாக நினைத்தார்களாம். பூர்வத்தில் கேப் காலனி (Cape Colony) என்னும் நாட்டில் குடியேறினவர்கள் ஆயிரம் பவுன் விலையுள்ள உயர்ந்த வயிரங்களைக் கூழாங்கற்களென் றெண்ணி அவைகளைக் குழந்தைகளுக்கு விளையாடக் கொடுத்துவந்ததாகச் சொல்வ துண்டு. முதல் முதல் தீக்குருவியின் இறகு வர்த்தகஞ் செய்தவர்கள் ஒரு குருவியின் இறகுகளையெல்லாம் ஒரேதரத்தில் விற்றுவிட வேண்டுமென்று அதைச் சுட்டுக் கொல்லுவார்களாம். அவர்களின் பேதைமை எவ்வாறு இருந்தது பாருங்கள். அவர்கள் அவ்வாறு செய்துவந்தது நாள்தோறும் ஒரு பொன்

முட்டையை யிட்டுக்கொண்டிருந்த ஒரு குள்ளவாத்துக் குரியவன் அதன் வயிற்றை யறுத்து அங்குள்ள பொன் முட்டைகளை யெல்லாம் ஒரேதினத்தில் எடுத்துக்கொள்ள முயன்றதை பொக்குமல்லவா. அவர்க ளந்த தீக்குருவிகளைக் கொல்லாமல் வைத்திருந்தால் ஆறு மாதத்துக் கொருமுறை அதன் அழகான இறகுகளை எடுத்துக்கொள்ளக் கூடும். தீக்குருவிகளை வளர்க்கிறவர்கள் அவைகளி னிடத்தில் மிகுந்த ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். சுயேச்சையாய்க் காடுகளில் மேயும்போது அவைகளுக்கு எந்தவித மான நோயும் வராது. ஆனால் கூடுகளி லடைப்பட் டிருக்கும் பொழுது அவைகளினிடத்தில் அநேகவிதமான நோய்கள் தோன்றுகின்றன. அவை கூத்தாடும்பொழுதும் கீழே விழும்பொழுதும் அவைகளின் தேகத்தில் வெகு சுலபமாய்க் காயங்கள் படுகின்றன.

சிங்கம், நரி, சிவிங்கி, காட்டுப்பூனை முதலிய மிருகங்களுக்கும் தீக்குருவிக்கும் இயற்கையிலேயே பகை. குரங்குகளும் இந்தப் பறவைக்கு அதிக உபத்திரவ முண்டுபண்ணுமாம்.

தீக்குருவிகள் சிறு பூச்சிகளையும் வேர்களையும் விதைகளையும் சிறு கற்களையும் தின்னும். இன்னும் எலும்புகள் பழைய இரும்புத்துண்டுகள் நெருப்பு இவைகளைத் தின்னும். ஆதலால், இவைகளை வளர்ப்பது அவ்வளவு கஷ்டமாயிராது. ஒருவன் தான் வளர்த்துக்கொண்டுவந்த தீக்குருவிக்கு, காகிதத்தை ஆகாரமாகக் கொடுத்துக்கொண்டு வந்தானும். இந்தப் பறவைகளின் இறகுகளைப் பறிக்கும்பொழுது அவைகளுக்குக் கோபம் வந்தால் குதிரைகளைப்போல் உதைக்குமாம். ஆகையால் அந்தச் சமயங்களில் அவைகளைச் சிறு குடிசைகளி லடைத்துவைத்துப் பறிப்பார்களாம்.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **புறுவோட்டம்.** — நியூஜிலாண்டு தீவிலிருந்து ஆஸ்திரேலியா தேசத்துக்குப் போயிருந்த ஒரு கனவானுக்கு அவர் திரும்பித் தமது சுதேசத்திற்குச் சென்றபோது அவருடைய சிநேகிதர் ஒருவர் தம்மிடத்திலிருந்த ஒரு புறுவை ஞாபகக்குறியாகக் கொடுத்தாராம். அந்தப் புறுவின் புதிய எஜமானன் அதை எவ்வளவு அன்புடன் வளர்த்து வந்தபோதிலும், அதற்கு மறுபடி தன் சுதேசத்திற்குப் போகவேண்டுமென்ற விருப்பமிருந்தது. பலநாள்வரையில் அது தன்னையவர் மறுபடி ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வாரென்று எண்ணிக்கொண்டிருந்தது. கடைசியில் ஒருநாள் இவ்வாறு காத்துக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை, ஆகையால் நாமே பறந்து கடலைத் தாண்டி விடலாமென்று தீர்மானித்தது. கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இறகுகள்தவிர வேறெந்த விதமான வுதவியையும் அது எதிர்பார்க்கவில்லை. ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள தன் சுதேசத்திற்குச் செல்லவேண்டிய மார்க்கம் இன்னதென்று யோசித்துத் தெளிந்து அந்த வழியாகப் பறக்க வாரம்பித்தது. சிறிது நேரமாயினும் கால்களை யூன்றி இளைப்பாறுவதற்கு மத்தியில் ஓரிடமு மில்லாமல், தன்னுடைய சுபாவ வுணர்ச்சியினால் திசை தப்பாமலும், அதன் அழகான சிறகுகளைக் கப்பல் பாய்களைப்போல் விரித்து அடியிலுள்ள சமுத்திரத்தை நுட்பமாய்க் கவனித்துக்கொண்டும் அது யாத்திரை செய்தது. அவ்வாறு அது பறந்து சென்று அதன் நாட்டை யடைந்து அதன் பழைய எஜமானன் வீட்டிற் சேர்ந்துவிட்டதாம். ஆனால் அப்பொழுது அது அதிக தளர்ச்சி யடைந்திருந்தது. அதன் ஆச்சரியகரமான செய்கைக்கு எல்லாரும் வியந்து அதை அதிக அன்போடு வேண்டிய உபசாரணைகள் செய்தார்களாம்.

2. நீர்வாழ் ஜந்துக்களின் சாலை.—சென்னை திருவல்லிக்கேணி கடலோரத்தில் கட்டப்பட்டிருக்கிற நீர்வாழ் ஜந்துக்களின் சாலை (Aquarium) எல்லோரும் பார்க்கத்தக்க விநோதமான சாலைகளி லொன்று. இவ்விதமான சாலை இந்தியாவில் வேறெவ்வூரினும் இல்லாததினால், பம்பாய்ப் பட்டணம் மிருகக் காட்சிச் சாலையினாலும், கல்கத்தா நகரம் கிருஷிச்சாலையினாலும் பிரசித்தமடைந்திருப்பதுபோல் சென்னையும் இந்த மேன்மையான நீர்வாழ் ஜந்துக்களின் சாலையால் பேர்பெற்றிருக்கிறது. நீரில் வாழ்கிற ஜந்துக்களை நிலத்தில் உயிரோடு காட்டும்பொருட்டு இங்கே செய்திருக்கிற ஏற்பாடுகளைப்

போல் வேறு இடங்களில் செய்வது கஷ்டமென்று சிலர் எண்ணுகிறார்கள். இப்பொழுது இவ்விடத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிற சில மச்சராசிகளே பார்ப்பவர்களின் மனதைக் கவரத்தக்கவையாயிருக்கின்றனவென்றால், பலபொருட் காட்சிச்சாலையில் காணப்படுகிற அநேகவித மச்சராசிகளையெல்லாம் உயிரோடு இங்கே கொண்டுவந்து வைத்தால் உண்மையாகவே இந்தச் சாலை இந்தியா தேசத்தில் அவசியமாய்ப் பார்க்கப்படவேண்டிய காட்சிகளில் ஒன்றாயிருக்கு மென்பதற்குச் சந்தேகமேயில்லை.

---

3. அபாயமான ஆட்டம்.—சிங்கப்பூரைச் சேர்ந்த கோலாலம்பூர் என்னு மூரிலிருக்கும் "பெடால் டிஸ்பென்சரி" என்னும் வைத்தியசாலைக்கு மானேஜராயிருந்த மிஸ்டர் யப். வி. கை என்னும் துரை சில சிறுத்தைப் புலிகளை வளர்த்துவந்தார். அவற்றி லொன்றைப் பாங்காக் என்னும் பட்டணத்தில் ஒரு எருமைக்கடாவுடன் சண்டை செய்ய விட்டாராம். அந்தச் சிறுத்தை சண்டை செய்யச் சம்மதியாமல் கிராதியைத் தாண்டி வெளியே ஓட ஆரம்பித்தது. கை துரையதைத் துரத்திக்கொண்டுபோய். கைத்துப்பாக்கியினால் சுட்டாராம். ஆனால் அந்தக் குண்டு சிறுத்தையின்மேல் தாக்கவில்லை. உடனே அதற்கு அதிக கோபம் வந்து அவர்மேல் பாய்ந்து அவரைப் பல விடங்களில் காயப்படுத்தியதாம். அருகிலிருந்த இன்னொரு துரை தன்னுடைய வேட்டைக் கத்தியினால் அதைக் குத்திக் கொன்றுவிட்டனர். காயப்பட்ட துரையை சிங்கப்பூருக் கனுப்பினார்கள். ஆனால் அவர் வழியிலேயே கப்பலில் இறந்துவிட்டனராம். இத்தகைய அபாயமான வேடிக்கைகளை மானிட ரெப்பொழுது விடுவாரோ அறியோம்?

---

4. பக்ஷிகளின் கூடுகள். — அநேக சிறுபிள்ளைகள் மரங்களில் கட்டப்பட்டிருக்கும் பக்ஷிகளின் கூடுகளை யபகரித்துக் கொண்டு போகிற விளையாட்டுச் சுபாவ முள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு விளையாட்டாயிருப்பது அப்பறவைகளுக் குபத்திரவமாயிருப்பதை யவர்க ளறிகிறதில்லை. பறவைகள் கூடுகட்டுவது எளிதான காரியமல்ல. பலநாள் பிரயாசப்பட்டு ஒரு கூடு கட்டும். பின்னுஞ் சிலர் அந்தக் கூடுகளிலிருக்கும் முட்டைகளை யெடுத் துடைப்பதும் குஞ்சுகளை யெங்கேயாவது கொண்டுபோய் விட்டுவிடுவதுமான காரியங்களைச் செய்கிறார்கள். அது தாய்ப்பறவைகளுக்கு எவ்வளவு துக்கத்தை விளைவிக்குமென்று கவனித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட சிறுவர் தங்கள் வீடுகளில் தாய் தந்தையருடனும் சகோதர சகோதரிகளுடனும் சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் திடீரென்று ஒரு பெரிய மிருகம் வந்து அவர்களில் யாரையாவது தூக்கிக்கொண்டு போய்விட்டால் அவர்களுக் கெப்படியிருக்கும். குஞ்சுகளும் முட்டைகளு மபகரிக்கப்பட்ட பறவைகளுக்கு மப்படியேயிருக்கு மென்பதை யுணர்ந்து அப்படிப்பட்ட கெட்ட காரியங்களைச் செய்யாம லிருப்பார்களாக.

---

5. பாடேம் துரையின் ஞாபகப் பண்டு.—இந்தப் பண்டுக்கு விஜயநகரத்து மஹாராஜகுமாரிகா சாஹிபா அவர்கள் அளித்த 1,500 ரூபாயை அப்பண்டின் காரியதரிசி அநேக வந்தனத்துடன் அங்கீகரித்தார். பாடேம் துரையவர்களின் உருவச்சிலை ஏறக்குறைய பூர்த்தியாகி விட்டது. சீக்கிரத்தில் ஒரு தகுந்தவிடந் தேடி அதை நாட்டுவார்கள். ஆகையால் விருப்ப முள்ளவர்கள் அதற்காக ஏதாவது சந்தா கொடுத்தால் அன்புடன் அங்கீகரிக்கப்படும்.

---

6. பெரிய திமிங்கிலம்.—சென்ற ஜனவரி மாசத்தில் பம்பாய் இராஜதானியில் விஜயதுர்க்கம் என்னும் துறைமுகப் பட்டணத்திற்கு இரண்டரை மைல் தூரத்திலிருக்கும் கற்பாறைகளில் ஒரு பெரிய திமிங்கிலம் ஒதுக்கப்பட் டிருந்ததாம். அது 70 அடி நீளமுள்ளதா யிருந்ததாம். இந்த ஜாதி திமிங்கிலம் மிகவும் அபூர்வமாய்த்தான் காணப்படுகிறதாம். சுமார் ஐந்து வருஷங்களுக்குமுன் அதேமாதிரி திமிங்கிலமொன்று பம்பாய்க் கடற்கரைப் பக்கத்தில் காணப்பட்டதாம்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1911.